மாதர் போதினி

No. 252 டிசெம்பர் 1918 No. 12

SELF-EXAMINING QUESTIONS

தற்பரிசோதனைக் கேள்விகள்

1. நான் கிறிஸ்துவண்டை கொண்டுவரும் ஒவ்வொரு ஆத்துமாவுக்கும் ஓராயிரம் ரூபாய் ஒருவர் எனக்குக் கொடுக்கிறதுண்டானால், நான் இப்போது பிரயாசப்படுவதிலும் அதிகமாய் ஆத்தும ஆதாயஞ்செய்ய முயற்சிப்பேனா? அப்படியானால் நான் தேவனிடத்திலும் ஆத்துமாக்களிடத்திலும் அன்புகூருவதைவிட பணத்தை அதிகமாய் நேசிக்கிறேன். ஒரு ஆத்துமாவின் விலை மதிக்கப்படா பெருந்தொகையாகும். 'ஒரு மனுஷன் உலக முழுவதையும் ஆதாயப்படுத்தினாலும் தன் ஆத்துமாவை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபமென்ன?'

2. ஒரு குருடன் கைப்பிடியில்லா ஆழமான கிணற்றுக்கு நேரே நடந்துசெல்லுகையில் நான் பார்த்துக்கொண்டிருந்தும் அவனைத் தடுக்காமல் கவலையற்றிருந்ததால் அவன் கிணற்றில் விழுந்து மாண்டுபோனால், அவனைக் கொலைசெய்தவன்போல் கடவுள் பார்வையில் எண்ணப்படுவேனல்லவா? இயேசு இரட்சகரை அறியாமல் குருடர்போல் அஞ்ஞானத்திலிருக்கிறவர்களுக்கு நான் அவரைப் பற்றி அறிவியாதிருந்தால் அவர்கள் ஆத்துமப்பழி என் தலைமேல் சுமராதோ?

3. கிறிஸ்துவண்டை கொண்டுவரும்படி ஊக்கமான வாஞ்சையோடு எத்தனை ஆத்துமாக்களுக்காக கடந்த வாரத்திலோ, மாதத்திலோ, வருஷத்திலோ நான் பிரயாசப்பட்டிருக்கிறேன்? எத்தனை பேரோடு பேசியிருக்கிறேன்? தினசரி ஜெப ஜாபிதாவில் எத்தனை பேர் எழுதி, பரிந்து பேசி ஜெபித்திருக்கிறேன்? நான் கிறிஸ்து

வைப்பற்றிப் பேசாத இந்து சிநேகிதராவது அறிமுகமானவர்களாவது உண்டா?

4. பரலோகத்தில் பெயர் வாசிக்கப்படுகையில் என் மூலமாய்க் கிறிஸ்துவண்டை நடத்தப்பட்டவர்கள் எத்தனை பெயரிருப்பார்கள்?

5. உலகத்திலுள்ள என் மேலதிகாரிக்கு ஒருநேரம் அனலாயும், ஒருநேரம் வெதுவெதுப்பாயும், ஒருநேரம் குளிராயும் உழைப்பேனுகில் என் வேலை அவருக்குப் பிரீதியாயிருக்குமா? எவ்வளவு காலம் என்னை வேலையில் வைத்திருப்பார்? என் ஆத்தும ஆதாய ஊழியமும் இத்தன்மையதோ?

6. கடைசி நியாயத்தீர்ப்புநாளில் பத்து அல்லது ஐந்து தாலந்துள்ளவன்போல் நிற்பேனே, அல்லது ஒரு தாலந்து வாங்கினவன் போலிருப்பேனே?

A HEROIC ACT

(Children's Page)

ஓர் வீரச்செயல்

சத்திரமொன்றில் பலர் கூடியிருந்தனர். அது ஒரே வாசலும் ஒன்றே. வெறிபிடித்த நாயொன்று சிவந்த கண் நாக்கைத் தொங்கவிட்டுக்கொண்டு, அந்த ஒரே வாசற்படி துக்கொண்டு, மூர்க்கத்தோடு நின்றது. இக்காட்சியைக்க வரும் கலங்கினர்; பிள்ளைகள் கூக்குரலிட்டனர்; ஸ்தி னர்; ஆண்களோ பிரமித்து நின்றனர். இவ்வெ தப்பிப்போக என்ன வழிசெய்யலாமென்று இவர்கள் தலையை உடைத்துக்கொண்டனர். அச்சமயம் கும்பு மீட்க ஒருவன் வந்தான். இவன் வெளியேயிருந்து ஜனத்திற்குப் பதிலாகத் தான் ஒருவன் மரிப்பது சொல்லி, தன் இரு கைகளாலும் அந்த நாயின் வாயை மூடிக்கொண்டு, ஜனத்தையெல்லாம் ஒரு தீங்கும் வெளியே அனுப்பிவிட்டான். நாய் இவனைப் படுத்தினபாடு சொல்லி முடியாது. அவன் அதோடு வெகுவாய் எதிர்த்துநின்றான். இன்னொருவன் அந்நாயைச் சுட்டுவிட்டான். முதலில் நாயோடு போர் செய்தவனுக்கும் பைத்தியம்பிடிக்கும் என்பதற்குச் சந்தேகமில்லை. அவன் தன்னைச்சுற்றி பரிதாபத்தோடே பார்த்துநின்ற சகோதாரோடே, 'நீங்கள் ஒருவரும எனக்காக வருத்தப்படவேண்டாம். இத்தனை பெயரைத் துன்பத்திலிருந்து விடுவித்தேனே என்பதைக்

குறித்து எனக்குச் சந்தோஷம் அதிகம். எனக்குப் பைத்தியம் வரும் போது நான் ஒருவருக்கும் தீங்குசெய்யாதபடி என்னை ஒரு மரத்தில் கட்டிவிடுங்கள். சுயபுத்தி இருக்கும்வரையில் சிறிது ஆகாரம் கொடுங்கள். அதன்பிறகு ஒருவரும் என்னண்டை வரவேண்டாம்' என்று சொல்லித் தன்னை ஒரு மரத்தோடு சேர்த்துக் கட்டும்படி கேட்டுக்கொண்டனன். இவனுடைய கடைசிவார்த்தைகளைக் கேட்ட ஜனத்தில் கண்ணீர்விடாதவர் எவருமில்லை. இப்படியே இவன் ஒரு வாரத்தில் பைத்தியம்பிடித்து இறந்தனன்.

இவனைப்போல் தன் சகோதாருக்கு ஜீவனைக் கொடுப்பவர் வெகு சொற்பம். அப்படியேயிருந்தாலும் அவர்கள் சிநேகிதருக்காகத்தான் கொடுப்பார்கள். ஆனால் தம் சத்துருக்களுக்காக ஜீவனைக் கொடுத்த இயேசுபகவானின் சிநேகத்தை நாம் என்னென்று சொல்லலாம்!

A MATHEMATICAL PUZZLE

பிரிட்டிஷ் ராஜாவும் தற்கால யுத்தத்தில் அவரைச் சேர்ந்தவர்களும்

பிரிட்டிஷ் ராஜா

பிறந்த	வருஷம்	1865
பட்டத்துக்கு வந்த	,,	1910
அரசாண்ட	,,	8
இதுவரை உயிரோடிருந்த	,,	53
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

பிரான்சுப் பிரசிடேன்ட்

பிறந்த	வருஷம்	1860
உத்தியோகம் வகித்த	,,	1913
உத்தியோகஞ் செய்த	,,	5
இதுவரை உயிரோடிருந்த	,,	58
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

பெல்ஜியம் ராஜா

பிறந்த	வருஷம்	1875
பட்டத்துக்கு வந்த	,,	1909
அரசாண்ட	,,	9
இதுவரை உயிரோடிருந்த	,,	43
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

பிரசிடேன்ட் உவில்ஸன்

பிறந்த	வருஷம்	1856
உத்தியோகம் வகித்த	,,	1912
உத்தியோகஞ் செய்த	,,	6
இதுவரை உயிரோடிருந்த	,,	62
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

ஜப்பான் சக்ரவர்த்தி

பிறந்த	வருஷம்	1879
பட்டத்துக்கு வந்த	,,	1912
அரசாண்ட	,,	6
இதுவரை உயிரோடிருந்த	,,	39
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

இத்தாலியா ராஜா

பிறந்த	வருஷம்	1869
பட்டத்துக்கு வந்த	,,	1900
அரசாண்ட	,,	18
இதுவரை உயிரோடிருந்த	,,	49
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

மாண்டிநீகிரோ ராஜா

பிறந்த	வருஷம்	1841
பட்டத்துக்கு வந்த	,,	1910
அரசாண்ட	,,	8
இதுவரை உயிரோடிருந்த	,,	77
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

சேர்பியா ராஜா

பிறந்த	வருஷம்	1844
பட்டத்துக்கு வந்த	,,	1903
அரசாண்ட	,,	15
இதுவரை உயிரோடிருந்த	,,	74
	மொத்த வருஷம்	3836
	இரண்டால் வகுக்க	1918

1918-ம் வருஷம் தற்கால ஐரோப்பிய யுத்தத்தில் ஓர் முக்கிய வருஷமாய் இருக்கவேண்டியது. இதிலுள்ள சூட்சத்தைக் கண்டு பிடியுங்கள்.

A CURE FOR GARDEN PESTS

செடிகளை நாசம்பண்ணும் சில சாதாரண பூச்சிகளைக் கொல்வதற்கு எளிதில் வீட்டில் செய்யக்கூடிய ஔஷதங்கள்

(தொடர்ச்சி)

புகையிலை மருந்து.—இதைச் செய்யும் முறை: 1 பவுன் புகையிலையை (கவைக்குதவாத புகையிலைத்தூளும் தண்டும் போதுமானது) 2½ படி தண்ணீர் போட்டு அரைமணி நேரம் காய்ச்சி இறக்கி வைத்துக்கொள்ளலாம். அல்லது காய்ச்சாமல் ஒரு நாள் முழுவதும் புகையிலையை ஊறவைத்து சாற்றை எடுத்துவைத்துக்கொள்ளலாம். இதில் கால் பவுன் சவுக்காரத்தைப்போட்டுக் கரைக்கவும். இப்படி

செய்த மருந்தை செடிகளின்பேரில் பிரயோகம் செய்யுமுன் 6 அல்லது 7 மடங்கு தண்ணீரில் கலக்கவும். இம்மருந்து சீமை எண்ணெய் நாற்றம்பிடியாதபடி, அசுவுணி, மாப்பூச்சி இவைகளைப் போக்கடிக்க வேண்டிய தருணங்களில் அதிக உபயோகமானது. அதாவது கீரை முதலிய இலைகளில் சீமை எண்ணெயை உபயோகித்தால் சாப்பிட முடியாது. அவ்வித தருணங்களில் இம்மருந்தை உபயோகப்படுத்தலாம். புகையிலைச்செடி செடிப்பேனினால் பீடிக்கப்படும்போதும் இதை உபயோகிக்கலாம்.

கெடுதல் செய்யும் பூச்சிகளில் மிச்சமானவைகளைத் துரத்துவதற்கு செடியின் பக்கத்திலுள்ள மண்ணில் உலர்ந்த புகையிலைத்தூளை பிரயோகிக்கலாம்.

கீரை, முட்டைகோஸ் முதலிய உணவுக்குரிய இலைக்கறி செடிகளில் சீமை எண்ணெய் அல்லது புகையிலை ஒளஷதத்தை உபயோகப்படுத்தினால் துர்நாற்றம் அநேக நாள் இருக்கக்கூடியது. ஆதலால் அப்பேர்ப்பட்ட செடிகளுக்கு உபயோகப்படுத்த பின்வரும் பரிகார முறை நல்லது. ஆனால் அநேக நாள் தாங்காது.

சவுக்காரமருந்து.—கால் பவுன் மருந்தை 2½ பட்டணம்படி தண்ணீரில் கரைத்து, ஒரு வாரத்தில் அல்லது 3 தடவை உபயோகப்படுத்தவேண்டியது.

நாப்தலீன்.—செடிப்பேனுக்கு நாப்தலீன் மருந்தைப் பொடித்து இரண்டுபங்கு சாம்பலுடன் கலக்கி பேன்விழுந்த விடங்களில் தெளிப்பது. இம்மருந்தை விடியற்காலம் இலைகள் பனியினால் நனைந்திருக்கும்போது உபயோகப்படுத்தவேண்டியது. அல்லது குளிர்ந்த ஜலத்தை முதலில் தெளித்து, அதன்பிறகு மருந்தைப் பிரயோகிக்கவேண்டியது. அப்படி செய்தால்தான் மருந்து பூச்சியின் பேரில் ஒட்டி, அதிக குணம் செய்யும். நாப்தலீன் மருந்தின் அனுகூலமென்னவென்றால், அது தீங்கற்றது, பூச்சிகளைக் கொல்வதில் திறமுடையது, 24 மணிநேரத்தில் செடியின்மேல் பட்டவிடங்களில் வாசனைகூட இல்லாமல் ஆவியாய் மாறிவிடக்கூடியது. சில செடிப்பேன்களுக்கு மேல்தோல் தடித்திருக்கும். ஆனதுபற்றி சீமை எண்ணெய் மருந்து உபயோகமில்லை. அதற்குப் பதிலாக ரோசின் மருந்தை உபயோகிக்கலாம்.

அதைச் செய்யும் முறை: ஒரு பாத்திரத்தை அடுப்பேற்றி அதில் 2 பவுன் ரோசினும் 1 பவுன் சோடா உப்பும் பொடித்துப்போட்டு, அதை மூடும்படியாக தண்ணீர்விட்டு, அவை முழுவதும் கரையும் வரைக்கும் கொதிக்கவைத்து, கொதிக்கும்பொழுது கொஞ்சம் கொஞ்சமாய் 7½ பட்டணம்படி யாகும்படி குளிர்ந்த ஜலம்

விட்டு, மருந்தானது சுத்தமாகவும், இலேசாகவும், பாகுநிறமாகும் வரைக்கும் காய்ச்சி இறக்கிவைக்கவும். அப்படி இறக்கிவைத்த மருந்தில் ஒன்றுக்கு 7 மடங்கு தண்ணீர்விட்டுப் பிரயோகம் செய்ய வேண்டியது. மருந்து இன்னம் கெட்டியாகவேண்டியபொழுது, ஜலத்தைக் கொஞ்சமாக விட்டும் உபயோகப்படுத்தலாம். இம் மருந்து செடிப்பேன் விழுந்த விடங்களில் பிரயோகம் செய்யும் பொழுது பூச்சியின்பேரில் நுரைபோல் போய் மூடி, கொஞ்சம் உலர்ந்தவுடன் பூச்சியின்மேலுள்ள மூச்சுத் துவாரங்களை முழுவதும் மூடிக்கொள்வதினால் அவைகளைச் சாகச்செய்யும். இப்பூச்சிகளைக் கொல்வதற்கு தயார்செய்து விற்பனை செய்யப்படும் ஔஷதங்கள் பல உள. அதிக மருந்து வேண்டியகாலத்தில் அவைகளை வாங்கி உபயோகிக்கலாம். அவைகளில் முதன்மையானது குரூடாயில் எமல்ஷன் (Crude oil emulsion) என்பதும், மீன் சோப்பெண்ணெய் (Fish oil soap) மருந்துமே. சீமை எண்ணெய் மருந்து முதலான பூச்சிகளைக் கொல்லும் இம்மருந்துகளை அதிகமாய் அளவுக்கு மேல் பிரயோகிப்பதால் செடியிலுள்ள இலைகளைக் கருக்கி நாசப் படுத்துவதால், ஔஷதமானது வியாதியைப்பார்க்க அதிகம் கெடுதி செய்யும் என்பதை மறக்கக்கூடாது. கூடியவரையில் மேற்கூறிய முறைப்படியே மருந்துகளைக் கலக்கி உபயோகப்படுத்தவேண்டியது. ஆனால் பூச்சிகள் மிருதுவாயிருக்கும்போது அதிகம் தண்ணீர்விட்டு கலக்கி இலேசாயும், கெட்டியான தோலினால் அவை மூடப்பட்டிருக்கும்போது கொஞ்சம் தண்ணீர்விட்டு கலக்கி கெட்டியாகவும் உபயோகப்படுத்தலாம். இம்மருந்துகளை எப்பொழுதும் விடியற்காலங்களில், சூரியனுடைய வெப்பம் அதிகரிக்குமுன்னமே பிரயோகம்செய்வது நலம்.

பூச்சிகள் அதிகமாய்க் காணும்பொழுதும், அதிக நாள் விடாமல் காணும்பொழுதும், மருந்தை ஒருதரம் மாத்திரமேயல்ல, மூன்று அல்லது நான்கு முறை 15 நாளுக்கு ஒருமுறையாக விடாமல் உபயோகப்படுத்தவேண்டியது.

மருந்து பிரயோகம்செய்யுமுன் முழுவதும் செடிப்பேனினால் பீடிக்கப்பட்ட கிளைகளையும் அல்லது உலர்ந்து பட்டுப்போன செடிகளையும் அப்புறப்படுத்தி கொளுத்திவிடுவது நல்லது. இல்லாவிடின் இவைகள் பூச்சிகள் வந்து தங்குவதற்கு நல்ல குடியிருப்பாகிவிடும்.

அடியிற் கையொப்பமிட்டிருப்பவர் இன்னும் மற்ற பூச்சி சம்பந்தமான கேள்விகளுக்கு வேண்டுமான முறைகளைத் தெரிவிக்க சித்தமாயிருக்கிறார்.

டி. வி. ராமகிருஷ்ணய்யர்,
ஆக்டிங் சர்க்கார் பூச்சி சாஸ்திரி.

EVANGELISTIC CAMPAIGN

சுவிசேஷ படைமுயற்சி விஷயங்கள்

Personal work: How organized and accomplished

தனித்தாள் சுவிசேஷ ஊழியம்

இதை ஏற்படுத்தும் வகையும் கொண்டுநடத்தும் முறையும்

வகுப்பின் தலைவருக்கு சில ஆலோசனைகள்

பின்வரும் ஒழுங்குகளைத் தலைவர் நன்றாய் ஆராயவேண்டும். இவர் கிறிஸ்துவை மனிதர்களுக்குள் காட்டவேண்டும். இவைகள் யாவற்றிற்கும் மேலாக, மிகவும் ஊக்கமும் சித்தியுமுள்ள கிறிஸ்தவ ஊழியரின் ஜீவியத்தையும், அவர்களின் புஸ்தகத்தையும் படிக்க வேண்டும். ஒரு வகுப்பின் சித்திக்குக் காரணம் அவ்வகுப்பின் தலைவரே. ஆனால் சொற்ப அநுபவமுள்ள சில தலைவர்களுக்குப் பின்வரும் ஆலோசனைகள் சொல்லப்பட்டிருக்கின்றன.

1. **வேதப் பொருளின்மேல் விர்த்தி.** மற்ற எவ்விதக் காரியத்திலும் கவனத்தைச் செலுத்தாதபடி பொருளையே நன்றாய் ஆராய்ந்து அறிய வகுப்பை நடத்தவேண்டும். திறவுகோல் வசனம், ஒத்து வாக்கியம் இவைகளைத் தேவையானபோது கொடுக்கவேண்டும். வகுப்பின் அங்கத்தினர் ஒவ்வொரு வசனத்தின் சம்பந்தம், அர்த்தம் முதலானவைகளை கவனமாய்ப் பின்பற்றுகிறார்களா என பார்க்க வேண்டும்.

ஒவ்வொரு அங்கமும் தங்கள் தங்கள் நோட்டில் மற்றவர்கள் குறிப்பிட்டிருக்கும் விஷயத்தையும் குறித்துக்கொள்ளவேண்டும். ஆனால் தங்கள் பொருளுக்கேற்ற விதமாய், கேள்வியிலிருக்கும் பாகத்தை சரிப்படுத்திக் குறித்துக்கொள்வது மிகவும் உசிதம்.

ஒவ்வொரு பொருளைப்பற்றியும் படிக்கும்போது, வகுப்பின் உண்மையான நோக்கம் என்ன என்பதை மனதில் வைக்க வேண்டும்.

மற்றவர்களைக் கிறிஸ்துவினிடம் நடத்த மனிதர்களைப் பக்குவப் படுத்துவதும், அதற்கென்று அவர்களை தைரியப்படுத்தி அவ்விதப் பயிற்சியில் நடத்துவதுமே முக்கிய நோக்கம்.

2. **தனித்தாள் வேலையைப்பற்றி நன்றாய் சிந்திக்கச் செய்தல்.** முன்கூட்டத்தில் கடைசியாகச் சொல்லப்பட்ட விஷயத்தை இப்போது திரும்ப விவரமாகச் சொல்லவேண்டும்.

பிறகு, கடந்தவாரத்தில் அப்பொருளைப் படித்ததால் உண்டான பயனை ஒவ்வொரு அங்கத்தினரும் சொல்லவேண்டும். இந்தப் பலா பலன்களைக் கடைசியாக நன்ருய்த் தர்க்கித்து முடிவை அவரவர் நோட்டுபுஸ்தகத்தில் குறித்துவைத்துக்கொள்ளவேண்டும்.

ஒவ்வொரு விஷயத்தையும்பற்றிச் சிந்திக்க ஆரம்பத்தை நன்ருய் அறியவேண்டும். சில வேளைகளில் இவ்விதம் துவக்கத்திலிருந்து ஆராய ஒரு வகுப்புக்கு மேலேயே செல்லும். கேள்வியிலிருக்கும் மனிதனோடு தனித்தாள் வேலைசெய்யத் தகுந்த முறை இன்னதென் பதைக் கூடியவரைக்கும் யோசித்து, கடைசியில் ஒரு முடிவான முறைக்கு வரவேண்டும்.

வகுப்பின் அங்கத்தினர் யார்யாருக்கென்று படித்து உழைத்து வருகிருர்களோ, அவர்களுக்கெல்லாம் கூட்டங்களில் விசேஷித்த ஜெபம் ஏறெடுக்கவேண்டும். தலைவர், கூட்டத்தில் எந்த ஆளைப் பற்றி குறிப்பிட்டுப் பேசப்பட்டதோ அந்த ஆளோடு, கூட்டம் முடிந்தவுடன் தனித்துப்பேசி, அவருக்கு நல்லாலோசனைகளைச் சொல்லி அவரோடேயே ஜெபிக்கவேண்டும்.

உண்மையாய் அசைவு காணப்படுகிற மனுஷரைப்பற்றியே அதிகமாய் வற்புறுத்தவேண்டும். இது ஒரு குறிப்பிட்ட வேலையா யிருக்கிறது. இது அவ்வேலைக்கு மிகவும் உற்சாகத்தையும் கொடுக் கிறது. ஒரு மனிதனுடைய ஜீவியம், இவ்விதமாக ஒரு வகுப்பின் ஜெபத்திலும் சக்தியிலும் சார்ந்திருக்கிறதென்பதை உணர்ந்தால், இவ் வேலை மிகவும் சித்தியுள்ளதாயிருக்கும்.

எங்கெந்த இடங்களில் இந்த வேலையை அசட்டைசெய்து தள்ளி விடுகிருர்களோ, அங்கேயெல்லாம் இவ்வேலையால் உண்டாகும் பயன்கள் ஒன்றுமில்லாமல் போய்விடுகிறதென்று அநுபவத்தில் காணப்படுகிறது. ஆகையால் இவ்வித வேலையில் மிகவும் உறுதிப் படுத்தப்படவேண்டும்.

3. அங்கத்தினர் சமீபமாக செய்த தனித்தாள் வேலையின் ரிப்போர்ட்டுகளைச் சொல்லச்சொல்லுதல். அங்கத்தினர் தனித் தாள் வேலையை முழுவதுமாய் செய்ய, அதற்கேற்ற தக்க மனிதர் களைத் தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும்.

சில அங்கத்தினருக்கு இந்த தனித்தாள் வேலையில் அநுபவ மில்லை. சிலர் சில காரணங்களால் இந்த வேலையில பிரவேசிக்கப் பின்வாங்குவார்கள், அல்லது சமயமில்லை என்பார்கள். இவ்வித மான காலங்களில் தலைவர் அவர்களை தைரியப்படுத்தி நடத்த வேண்டும்.

இதற்கு மிகவும் உசிதமான வழி என்னவென்றால், அவர்களுக்கு ஒரு குறிப்பிட்ட தனித்தாள் வேலையைக் கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்வதால் தலைவர் அம்மனிதனுக்கு ஒரு நல்ல வழியைத் திறப்பதுமட்டுமல்ல, அதோடு அவனுக்கு ஒரு உத்திரவாதத்தையும் கொடுப்பதாகும். ஏனெனில், இவ்வித வேலைக்கு கூரிய புத்தியும் தாபந்த ஜெபமும் செய்யப்படவேண்டும். தலைவர் இவ்வித தனித்தாள் வேலையில் குறிப்பிட்டுக் கொடுக்கவேண்டிய பாகம் எவ்வளவு முக்கியமானதென்று காணப்படுகிறது.

ஒவ்வொரு வகுப்பிலும் 10 நிமிஷங்களாக, சென்ற வருஷத்தில் செய்த வேலையை அங்கத்தினர் சொல்லும்படியாக விடவேண்டும். ஆனால் அங்கத்தினர் இதை வகுப்புக்குமுந்தி எழுதி தலைவரிடம் கொடுத்துவிட்டால் அதிகநேரம் மீதியாகும். தலைவரும் நன்றாய் ஆராய ஏதுவாகும். அங்கத்தினர் சரியான நேரத்தில் வகுப்புக்கு வரும்படி, தலைவர் அவ்விதம் கொடுக்கப்பட்ட ரிப்போர்ட்டை அடுத்த வகுப்பின் துவக்கத்தில் திரும்பக் கொடுத்துவிடவேண்டும். அடுத்த கூட்டத்தில் பேசப்படப்போகிற விஷயம் இக்கூட்டத்திலேயே சொல்லப்படவேண்டும். இந்த விஷயம் அங்கத்தினர் கொடுத்த ரிப்போர்ட்டில் தெரிந்தெடுக்கப்பட்டதாயிருக்கவேண்டும்.

அப்படியே அடுத்த கூட்டத்தில், குறிக்கப்பட்ட ஒரு மனுஷனைப்பற்றி இன்னும் அநேக விஷயங்களைப்பற்றிச் சொல்ல, அந்த ரிப்போர்ட்டு கொடுத்த ஆளைச் சொல்லும்படி கேட்கவேண்டும். இவர் குறிக்கப்பட்ட அம்மனுஷனோடு சம்பாஷித்ததைமட்டுமல்லாமல், அவன் குணாதிசயங்களையும் சொல்லவேண்டும். மற்ற அங்கத்தினரும் கூட இதற்கு உதவியாக இன்னும் சில குறிப்புகளைச் சொல்லலாம். பிறகு எல்லாம் சேர்ந்து அம்மனிதனின் மார்க்க ஜீவியம் அல்லது மார்க்க வாஞ்சை எவ்வளவென்றும், அதற்கு அவனுக்குத் தடையென்னவென்றும் பார்க்கவேண்டும். இவைகள் யாவையும்பற்றி ஒரு தெளிவான வகையை ஒவ்வொரு அங்கத்தினரும் தங்கள் தங்கள் நோட்டில் குறித்துக்கொண்டு அடுத்த வாரங்களில் அம்மனிதனுக்கு வேண்டிய எல்லா உதவியையும் செய்ய வேண்டும்.

4. **வேத பயிற்சி செய்யவேண்டும்.** வேதபுஸ்தகம், நோட்டு முதலானவைகளை மூடிவைத்துவிடவேண்டும். பொருளின் ஒரு பாகத்தைத் தெரிந்துகொண்டு, யாராவது ஒரு அங்கத்தவரைக் கூப்பிட்டு, அதற்கேற்ற ஒரு வேத வசனத்தைச் சொல்லும்படி கேட்க வேண்டும். மற்றொருவர் அவ்வசனம் எந்த புஸ்தகத்தில், எந்த அதிகாரத்தில், எந்த வசனத்தில், எந்த பக்கத்திலிருக்கிறதெனச் சொல்ல

வேண்டும். கூடுமானால், அதன் முன்பின் வாக்கியத்தோடு ஒத்து வரும் அர்த்தத்தையும் சொல்லவேண்டும். இவ்விதமாகவே ஆத்துமாக்கள் விஷயத்தில் வருபவையைப்பற்றியும் சொல்லத் தயாராயிருக்கவேண்டும்.

தாமதமில்லாத விடை தேவை. தகுந்த வேத வசனம் தேவை.

இவ்வித வேத பயிற்சியின் முக்கிய நோக்கமென்னவெனில், வேதத்தை செம்மையாயும் உடனேயும் உபயோகிக்க பழக்குவிக்கவே, ஒவ்வொரு சித்தியுள்ள தனித்தாள் ஊழியனிடம் இந்த குணங்கள் கட்டாயம் வேண்டும். இவ்வித வேத பயிற்சி ஒரு வெறும் பழக்கமாகமட்டுமல்லாமல் உண்மையாய் உணர்ந்து செய்யக்கூடியதாயிருக்க கவனித்துக்கொள்ளவேண்டும்.

5. பரீட்சையைப்பற்றி சொல்லல். ஒவ்வொரு வகுப்பின் முடிவிலும் ஒரு எழுதும் பரீட்சை இருந்தால் நல்லதென்று காணப்படுகிறது. இதின் விவரம் தலைவருக்குத் தெரிந்திருப்பது அவசியம்.

6. இவ்விதம் வைக்கும் வகுப்பில் உண்டாகும் கஷ்டங்களைப் பற்றிச் சொல்லல். பின் வருபவைகள் தலைவருக்கு அதிக கஷ்டமானவைகள் என்று கூட்டங்களிலும் காகிதங்களிலும் காணப்பட்டன :

(1) அங்கத்தினர் சரியாய் கூட்டத்திற்கு வாராமை. இதற்கு ஒழுங்காய் வகுப்புக்கு வருவதால் உண்டாகும் சித்தியையும், கிரமமாய் பொருட்களைக் கவனித்துப் படிப்பதால் இவ்வித வேலைக்கு உண்டாகும் நன்மையையும் [illegible]ந்து தலைவர் காண்பிக்கவேண்டும். இது அவர்கள் மனச்சாட்சிக்கேற்றதாய்ச் செய்யவேண்டும். சில தலைவர், அங்கத்தினர் தொகையைக் குறைத்துவிடுகிறார்கள். யாராவது ஒருவன் தகுதியான காரணமில்லாமல் நின்றுபோனால் அடுத்தவன் சேர்க்கப்படலாம். ஒருவர்க்கொருவர் இசைந்திருப்பதால் அதிகமானபேர் கிரமமாய் வர ஏதுவாயிருக்கும்.

(2) அங்கத்தினர் நேரத்திற்கு வாராமை. இதற்கு தகுந்த முறை என்னவெனில், தலைவர் நேரத்தைக் குறிப்பிட்டு அதற்குள் முடிக்கவேண்டும். சிலர் நேரமானவுடனே வகுப்பின் கதவை அடைப்பதால், அடுத்த நாள்முதல் நல்ல ஒழுங்கைக் கண்டார்கள். ஆனால் இதுவும் ஐக்கியத்தோடு நடத்தப்படவேண்டும்.

(3) சிலர் அங்கத்தினர் போரை ஆயத்தப்படுத்த போதுமான நேரம் இல்லை என்று சொல்லல். இதற்கு அநேக முறைகள் கையாடலாம். ஆனால் இரண்டு விசேஷித்தவை யென்னவென்றால், (எ) அவர்களுக்கு, தங்கள் நேரத்தைக் கணக்கிட்டுக் கொள்ளவும், இதனால் ஒரு நாளைக்கு 20 நிமிஷம் இந்த விசேஷ

வேலைக்கு இல்லாமற்போகுமா என்பதையும் காண்பிக்கவேண்டும்; (b) நாளின் முதற் பாகத்தை வேதபாடத்துக்கென்று செலவழிக்கத் தூண்டிவிடவேண்டும்.

(4) பாடம் குறிக்கப்பட்ட நேரத்தில் முடியாமை. தலைவர் நேரத்தின் மிகுதியான பாகத்தில்தானே எல்லாக் கேள்விகளையும் கேட்டுக்கொண்டு, கடைசி சில சமயங்களில்மட்டும் மெம்பர்களைக் கேட்கவிடவேண்டும். கேள்வி மிகவும் கஷ்டம்தான். இதற்கு மிகுந்த புத்திக்கூர்மை தலைவருக்கு வேண்டும். இவ்விதம் அவர் செய்தால் எல்லாம் சரியாய் நேரத்துக்குள் முடிந்துவிடும், விடைக்காக காத்திருக்கக்கூடாது. வேண்டியபோது வசனமோ, பிரிவோ, தலைவர் சொல்லிக்கொடுக்கவேண்டும். சரியான நேரத்தில் முடியாவிட்டால் 2 பாட நேரத்தை ஒரு பொருளுக்கே எடுத்துக்கொள்ளலாம்.

(5) வகுப்பில் தர்க்கம் உண்டாவது. வகுப்பில் எப்போது வீண்தர்க்கம் உண்டாகுமோ அல்லது பொருளை விட்டுப் போய்விடுகிறதோ அல்லது காரியமில்லாமல் காட்டப்படுகிறதோ, அப்போதெல்லாம் தலைவர் நிறுத்திவிடவேண்டும். யாராவது இதில் வருத்தத்தைக் கொடுத்தால் அவரிடம் தனித்துப் பேசவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக ஜெபசிந்தையோடு வகுப்பை நடத்தவேண்டும். ஜெபத்தோடு துவக்கி ஜெபத்தோடு முடிக்கவேண்டும். அடிக்கடி ஜெபத்துக்கு அழைக்கவேண்டும். நித்தியத்துக்கென்று கட்டப்படுவதால் ஜெபத்தோடேயே இருக்கவேண்டும்.

(6) சில மெம்பர்கள் தனித்தாள்வேலை செய்கிறதில்லை. முன் சொன்னபடி குறிப்பிட்ட ஒரு வேலையைக் கொடுத்து, சில குறிப்புகளையும் சொல்லவேண்டும். அவர்களோடு ஜெபித்து அவர்கள் செய்வதில் தைரியப்படுத்தவேண்டும். தலைவர் முன்மாதிரியாக இருக்கவேண்டும். தலைவர் முயற்சியெடுத்தும் ஒருவன் தன் வேலையில் சித்திபெறாவிட்டால் வகுப்பில் மற்றொருவருக்கு இடங்கொடுத்துவிட்டு போகச்சொல்லவேண்டும். எல்லாக் காலங்களிலும் தனித்தாள்வேலையைச் செய்ய கற்றுக்கொள்வது எப்படியென்றால், அவ்வேலையைச் செய்வதினாலேயே கற்றுக்கொள்ளலாம்.

(7) நான் வகுப்பை நடத்த முடியாதேன்று சொல்லல். அதை விட்டுவிட்டு முந்தி தீர்க்க ஆலோசித்துப்பார்க்கவேண்டும். இவ்வித ஒழுங்குகள் தலைவர்கள் விர்த்தியடையச் செய்ததென நினைக்க வேண்டும். இவைகள் யாவையும் ஆராய்ந்துபார்த்தும் மற்றொருவர் இதைப்பார்க்கிலும் நன்றாய்ச் செய்வாரென அறிந்தால், அவரிடம் அவ்வேலையை ஒப்புக்கொடுத்துவிடலாம்.

INDIAN TEACHERS' UNION, MADRAS

சென்னையில் இந்திய உபாத்தினிமார் ஐக்கிய சங்கம்

பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கும் கலாசாலை மாணவருக்கும் உதவியாக அநேக சங்கங்கள் ஏற்பட்டிருந்தபோதிலும் உபாத்திமாருக்கு உதவியாக சங்கங்கள் இல்லை. உபாத்திமாருக்கும் அவர்களுக்குரிய கஷ்டங்களுண்டு என்பதை உணர்ந்து அவர்களுக்குதவியாக இந்த சங்கம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. Miss E. T. Stevens அம்மாள் இந்த விஷயத்தில் மிக்க சிரத்தையெடுத்து இச்சங்கத்தை ஸ்தாபித்து நடத்திவருகிறார்கள். இதில் எவ்வகுப்பு உபாத்திமாரும் சேரலாம். அங்கிலேய பாஷையிலும் சுதேச தமிழ்ப்பாஷையிலும் கூட்டங்கள் நடத்தப்படும்.

இச்சங்க சம்பந்தமாய் வரப்போகிற 1919-ம் வருஷம் ஜனுவரி மாதம் 3-ம் தேதி முதல் 7-ம் தேதி வரை வேப்பேரி லண்டன்மிஷன் போர்டிங் பாடசாலையில் உபாத்தினிமார் கான்வரன்ஸ் கூட்டம் (Conference) நடந்தேறும். உபந்நியாசங்கள் தமிழிலும் இங்கிலீஷிலும் செய்யப்படும். இந்திய உபாத்தினிமார் யாவரும் வரலாம்.

வருகிற யாவரும் 5 நாளும் வேப்பேரி லண்டன் மிஷன் போர்டிங் பாடசாலையில் தங்கியிருக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம். தங்கள் வீட்டைவிட்டு வரக்கூடாதவர்கள் ஒவ்வொரு நாளும் கூட்டங்கள் முடிந்தபின் தங்கள் வீடுகளுக்குப் போகலாம்.

கான்வரன்ஸ் அப்ளிக்கேஷன் பாரம் (Application Form) பின் அனுப்பப்படும் கான்வரன்ஸுக்கு வரப் பிரியமானவர்கள், ஊமன்ஸ் கிறிஸ்டியன் காலேஜ், நுங்கம்பாக்கத்திலிருக்கும் Miss E. T. Stevens அம்மாளுக்குப் போஸ்ட்கார்ட் எழுதினால் அதிக உதவியாயிருக்கும்.

உபாத்தினிமார்களும் நண்பர்களும் வரப்போகிற கான்வரன்ஸ் கூட்டத்தை நினைத்து, இந்தப் புதுமுயற்சியை தேவன் ஆசீர்வதித்து நடத்தும்படியாகவும், வருகிற யாவரும் ஆண்டவரைச் சந்தித்து அன்பின் ஊழியஞ்செய்ய அவரால் புதுஜீவனும் பெலனுமடைந்து போகவும் ஜெபிக்கக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

A CHRISTMAS GREETING

கிறிஸ்மஸ் வாழ்த்துதல்

'இயேசுவை இராஜாவாக்குங்கள்' என்ற கிறிஸ்மஸ் செய்தி உங்களெல்லாருக்கும் இப்பொழுது வருகிறது.

இராஜாதி ராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமானவர், தூதர் ஓயாமற் போற்றும் வானலோகம் விட்டு பூலோகத்தில் ஏழையாய் வந்து பிறந்திருக்கிறார். கீழ்ப்படிதல் என்னும் பொன்னையும், தாழ்மை என்னும் தூபவர்க்கத்தையும், அன்பு என்னும் வெள்ளைப்போளத்தையும் எடுத்துக்கொண்டு அவரைப்போய்ச் சந்தித்து இராஜாவாக்க மனமுள்ளவர்கள் எத்தனை பேர்?

சமாதானப் பிரபு கடந்த வருஷங்களில் மும்முரமாய் நடந்த கொடிய யுத்தம் ஒய்ந்து தேசங்களுக்கெல்லாம் சமாதானம் கட்டளையிட்டிருக்கிறார். இந்த சமாதானப் பிரபுவே சகல தேசத்தாருக்கும் இராஜா. இவரை எத்தனைபேர் இராஜாவாக ஏற்றுக்கொள்ளப் போகிறீர்கள்?

இந்த இயேசு ராஜா எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும்படி வந்திருக்கிறார். இவர் பிறப்பு அநேகருக்குமாத்திரமல்ல, சகலருக்கும் சந்தோஷமுண்டாக்க ஏற்பட்டது. படிப்பறியாத ஏழை இடையர் இவர் பிறப்பைப்பற்றி சாதாரண ஜனங்களுக்கு விளங்கக்கூடிய பெரிய வெளிச்சத்தினால் அறிந்து, தேவதூதர் தரிசனம் பெற்று இவர் இருப்பிடம் தேடிச்சென்று சாஷ்டாங்கமாய்ப் பணிந்துகொண்டார்கள். சாஸ்திரங்கள் கற்றுத் தேர்ந்த ஐசுவரியவான்களான சாஸ்திரிகள் ஓர் நட்சத்திரத்தினால் இவர் பிறப்பைப் பற்றி யறிந்து காணிக்கைகளோடு போய்ப் பணிந்துகொண்டார்கள். இந்த இயேசு சகல தேசத்தாருக்கும் ஜாதியாருக்கும் படித்தோர் படியாதோர் ஐசுவரியவான்கள் எளியவர்கள் என்ற பேதமின்றி யாவருக்கும் சந்தோஷத்தைக் கொடுக்கும் இரட்சகராகப் பிறந்திருக்கிறார். இவரை இராஜாவாக ஏற்றுக்கொள்ளாதவர்கள் யாராவதிருக்கிறீர்களா?

இந்த இயேசு ராஜா உலகத்தை ஆக்கினைக்குட்படுத்த வராமல் இரட்சிக்கும்படி வந்து பிறந்திருக்கிறார். இயேசு என்ற நாமத்திற்கே இரட்சகர் என்றர்த்தம். பாவம் நீங்கி இரட்சிப்படைய விருப்பமுள்ள யாவரும் இந்த இயேசு இரட்சகரை இருதயத்தில் ஏற்றுக்கொள்ளலாம். இவரை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பு இல்லை. இவரால் இரட்சிப்படைந்தவர்கள் எத்தனைபேர்?

இந்த இயேசு ராஜா சதா நித்தியகாலத்துக்கும் இராஜா. இவர் இராஜரீகத்துக்கு முடிவில்லை. இவர் இராஜ்யம் அழிவில்லாதது; மாருதது. இவர் பூமியெங்கும் இராஜா. இவருக்கு மேற்பட்ட இராஜா யாருமில்லை. பூமியின் இராஜ்யங்களெல்லாம் இவருடைய தாயிருக்கையில் இவரை ஏற்றுக்கொள்ளாதவர்கள் எங்கே நிற்கக் கூடும்?

BIBLE STUDIES

THE CALL—MOSES

அழைப்பு—மோசே

யாத்திராகமம் 3: 2–6; எபிரெயர் 11 : 24–26 வரையில் வாசி.

'தேவன் முட்செடியின் நடுவிலிருந்து—மோசே மோசே என்று கூப்பிட்டார். அவன்: இதோ, அடியேன் என்றுன்.' யாத். 3 : 4. மோசேயினுடைய பாலியத்தைப்பற்றி உங்களுக்கென்ன தெரியும்? தேவ அழைப்பைப் பெறும்வரையுமுள்ள அவனுடைய சரித்திரத்தை ஆராய்ந்தறிக.

1.—காட்சியின் மூலமாயுண்டான அநுகூலங்கள்

யாத். 3 : 1–3.

(a) எரிகிற முட்செடியில் மோசே கண்டதென்ன? எபி. 1 : 3. அது தேவனுடைய ரூபமா? யோவா. 14 : 9. தேவன் உனக்கு காணப்பட்டிருக்கிருரா?

(b) 'நானெம்மாத்திரம்' வச. 11. மோசே ஏனிப்படிச் சொன்ஞன்? யாத். 2 : 10–11 வாசிக்கவும். தேவகாட்சியின் மூலமாய் உன்னை நீயே அறிந்துகொண்டிருக்கிருயா?

(c) இந்த தரிசன காலத்தில் இஸ்ரவேலர் எவ்வித நிலைமையிலிருந்தார்கள்? வச. 7–9.

அவர்களுடைய கூக்குரல் எத்தன்மையானது? பார்வோனை யாருக்கு ஒப்பிடலாம்? நமது தேசத்தாருடைய தற்கால ஸ்திதி ...? லூக்கா 4 : 18–ல் 'சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையை ...சித்தப்படுத்தல்' என்று கண்டிருக்கிற வார்த்தைகளின் அர்த்த ...ன?

...—அநுகூலங்களை அனுசரித்துச் செய்தவேலை

... சித்தம், ஆண்டவரே'—இது யாருடைய மறு...? சாமுவேல் அழைக்கப்பட்டபோது எவ்வித

மறுமொழி கொடுத்தான்!? 1 சாமு. 3: 4. பேதுருவையும் அந்திரேயாவையும் இயேசு அழைத்தபோது அவர்கள் என்னசெய்தார்கள்? மத். 4: 18–20. ஆண்டவர் உன்னை அழைக்கிறாரா?

(b) மோசே கிறிஸ்துவுக்காக எதைதை விட்டுவிட்டான்? எபி. 11: 24–26. கிறிஸ்துவுக்காக தகப்பனை விட்டவர்கள் யார்? மாற்கு 1: 20. கிறிஸ்துவின் அழைப்புக்கு மத்தேயு எவ்வண்ணம் இ[illegible]ங்கினான்? லூக்கா 5: 27.

யாத். 32: 33–லிருந்து நீர் கற்றுக்கொள்வதென்ன? மோசே ஜனங்களுக்காக எப்படி வேண்டிக்கொண்டான்? யாத். 33: 12. அவன் கிறிஸ்துவுக்கு எவ்விதம் முன்னடையாளமானவன்?

(இன்னும் வரும்.)

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1918-ஞ டிசெம்பர்மீ

1	ஞா.	எசே.	1.	1—1	11	பு.	சங்.	78.	36—54	21	ச.	எசே.	36	25—38
2	தி.	„	3.	1—11	12	வி.	„	78.	55—72	22	ஞா.	„	37.	1—14
3	செ.	„	3.	12—21	13	வெ.	„	79.	1—13	23	தி.	„	37.	15—28
4	பு.	„	8.	1—16	14	ச.	„	80.	1—19	24	செ.	சங்.	84.	1—12
5	வி.	„	11.	14—25	15	ஞா.	„	81.	1—16	25	பு.	„	85.	1—13
6	வெ.	„	18.	20—32	16	தி.	எசே.	33.	1—11	26	வி.	„	86.	1—17
7	ச.	சங்.	76.	1—12	17	செ.	„	33	12—20	27	வெ.	„	87.	1—7
8	ஞா.	„	77.	1—20	18	பு.	„	34.	1—10	28	ச.	„	88.	1—18
9	தி.	„	78.	1—16	19	வி.	„	34.	11—19	29	ஞா.	„	89	19—37
10	செ.	„	78	17—35	20	வெ.	„	34.	20—31	30	தி.	„	89.	38—52
										31	செ.	„	90.	1—17

C. L. S. PRESS, MADRAS—1918